1. தயவுசெய்து சிவப்பு நிறத்தில் உள்ள உரையை புறக்கணிக்கவும்
2. அசல் பிறப்பு பயிற்சிப் பட்டறைக்கான அணுகல் அறிக்கை
3. அசல் பிறப்பு நிறுவனம், இன, மத, கலாச்சார அல்லது சமூக-பொருளாதாரப் பின்னணி ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து கர்ப்பிணிப் பெண்களும் தமக்கும் தமது குழந்தைகளுக்குமான சரியான முடிவுகளை எடுக்க ஆதரவளிக்கும் விதமாக ஒரே அளவிலான நேர்மறை, உண்மை மற்றும் ஆதார அடிப்படையிலான தகவல்களை பெற வேண்டும் என உறுதியாக நம்புகின்றது. தேவைப்படும் அனைவருக்கும் குழந்தை பிறப்பு தொடர்பான கல்வியை வழங்க நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். தற்போது இருக்கக்கூடிய பல்வேறு டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் திறன்களை அடிப்படையாக் கொண்டு, எமது இணையதளத்தை வடிவமைத்துள்ளோம். பயனர் அனுபவத்தை மேம்படுத்த நாம் தொடர்ந்து முயற்சித்து வரும் அதே நேரத்தில் இருக்கக்கூடிய தரம் மற்றும் வழிகாட்டுதல்களை பின்பற்ற முன்னுரிமை வழங்குவோம்.
4. அசல் பிறப்பு பயிற்சிப் பட்டறை தற்போது பின்வரும் பயன்பாட்டு செயல்பாடுகளை வழங்குகின்றது:
5. எழுத்துகளை 500% வரை பெரிதாக்கலாம் (அதிகபட்ச அளவு)
6. எழுத்துரு அளவு, எழுத்துரு நிறம் மற்றும் பின்புல நிறம் மாற்றுவதற்கான வசதி மற்றும் இந்த அம்சங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்ற குறித்த வீடியோ வழிகாட்டி
7. விசைப்பலகையைப் பயன்படுத்தி முழு வலைத்தளத்தையும் உபயோகித்தல்
8. அனைத்து தற்போதைய மொபைல் சாதனங்களிலும் பயிற்சிப் பட்டறை முழுமையாக தொழில்படல்
9. போர்ட்ரெய்ட் மற்றும் லேண்ட்ஸ்கேப் மோட்களில் உபயோகிப்பதற்கான வசதி
10. எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் பயிற்சிப் பட்டறை பொதுவான சொற்றொடர்களில் எழுதப்பட்டுள்ளது. அத்தோடு, ஆறு மொழிகளில் மொழிபெயர்ப்பாளர்களால் மொழிபெயர்க்கப்படுவது போன்ற பல விடயங்கள் நடந்து கொண்டுள்ளன. இந்த பயிற்சிப் பட்டறையில் பயனர்களுக்கென்று குறிப்புகள் அடங்கிய பட்டியலும் உண்டு. அது அவர்களுக்கு மாற்றீடாக முக்கிய தகவல்களையும் கொடுக்கின்றது.
11. இணையதள உள்ளடக்க உபயோக வழிகாட்டுதல்கள் 2.1 என்பது அரசாங்க வழிகாட்டுதல்களாகும். அவை சிரமப்படுவர்களுக்கு எளிதாக உள்ளடக்கத்தை எவ்வாறு பயன்படுத்துவது போன்ற வழிகாட்டுதல் மற்றும் பரிந்துரைகளை வழங்குகின்றது. இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம், அசல் பிறப்புப் பயிற்சிப் பட்டறை முடிந்தவரை மிகப் பயனுள்ளதாக அமையும் என நம்புகின்றோம்.
12. எங்கள் ORCHA மதிப்பிடப்பட்ட பயிற்சிப் பட்டறையானது இணைய உள்ளடக்க அணுகல் வழிகாட்டுதல்கள் 2.0 AA தரத்தோடு முழுமையாக இணங்குகின்றது. அத்தோடு, புதுப்பிக்கப்பட்ட 2.1 AA தர வழிகாட்டுதல்களுடன் ஓரளவு இணங்குகின்றது.
13. பின்வரும் சிக்கல்களுக்கு தற்போது கவனம் செலுத்தப்படுகின்றன:
14. படங்களில் ALT உரை இல்லை
15. வீடியோக்களில் வசன வரிகள் அல்லது மாற்று டிரான்ஸ்கிரிப்ட்கள் இல்லை
16. இணையதளத்தில் உள்ள சில முக்கிய தகவல்களை பாவிப்பதற்கு மவுஸ் தேவை
17. எங்கள் பாடத்திட்டத்தை முடிந்தவரை பாவிப்பதற்காக, அசல் பிறப்பு நிறுவனம் முயற்சி செய்யும் அதே வேளையில், சமீபத்திய 2.1 AA தர வழிகாட்டுதல்களுடன் நாங்கள் இன்னும் ஒத்திசைந்து போகவில்லை. பயிற்சிப் பட்டறை முழுவதுமாக ஒத்திசைந்து போவதற்கு மேற்சொன்ன மாற்றங்களைச் செய்ய நாம் முயற்சித்து வருகிறோம். பயனர் அணுகலைத் மேம்படுத்துவதற்காக தொடர்ந்து கண்காணித்து மாற்றங்களைச் செய்வோம்.
18. நீங்கள் மாற்றுத் திறனாளியாக இருந்தால் எளிதாக உங்கள் சாதனத்தைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனை AbilityNet ல் உண்டு.
19. எமது பயிற்சிப் பட்டறை முடிந்தவரை பயனுள்ளதாக இருப்பதற்கு தீர்வுகளை எமது குழு தேடிக் கொண்டிருக்கும். ஆனால் நீங்கள் ஏதேனும் சிக்கல்களை எதிர்கொண்டால் அல்லது எங்களுக்கு பயனுள்ள அம்சத்தைப் பரிந்துரைக்க விரும்பினால், மாடியுல் 7 இன் முடிவில் பயனர் கருத்துப் படிவத்தைப் பூர்த்தி செய்யவும் அல்லது எமது தொடர்பு பக்கத்தினூடாக எம்மை தொடர்பு கொள்ளலாம்.
20. நாம் தற்போது PDF அல்லது பிரெய்லி பதிப்புகள் போன்ற சேவைகளை நேரடியாக பயனருக்கு அனுப்புவதில்லை. டி/காது கேளாதவர்கள், செவித்திறன் குறைபாடு உள்ளவர்கள் அல்லது பேச்சுக் குறைபாடு உள்ளவர்களுக்கு நாங்கள் மெஸேஜ் சார்ந்த சேவையை வழங்குவதில்லை.
21. சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் ஆணையம் (EHRC) பொதுத் துறை அமைப்புகளை (இணையதளங்கள் மற்றும் மொபைல் பயன்பாடுகள்) (எண். 2) அணுகல் விதிமுறைகள் 2018 ('அணுகல் விதிமுறைகள்') செயல்படுத்துவதற்கு பொறுப்பாகும். உங்கள் புகார்களுக்கு பதிலளிக்கும் விதத்தில் உமக்கு திருப்தி இல்லை என்றால், சமத்துவ ஆலோசனை மற்றும் ஆதரவு சேவையை (EASS) தொடர்பு கொள்ளவும்.

22. இந்த இணையதளத்தின் உபயோகம் பற்றிய தொழில்நுட்ப தகவல்கள்
23. அசல் பிறசவ நிறுவனம், பொதுத் துறை அமைப்புகள் (இணையதளங்கள் மற்றும் மொபைல் பயன்பாடுகள்) (எண். 2) அணுகல்தன்மை விதிமுறைகள் 2018 க்கு இணங்க, இணையதளத்தை பயன்பாட்டில் வைக்க அயராது உழைக்கின்றது.
24. இணக்க நிலை
25. பிரிவு 2.5.3 யைப் பூர்த்தி செய்யத் தவறியதன் காரணமாக, வலை உள்ளடக்க அணுகல் வழிகாட்டுதல்கள் பதிப்பு 2.1 AA தரத்துடன் இந்த இணையதளம் ஓரளவு ஒத்திசைந்துச் செல்கின்றது.
26. இந்த அணுகல் அறிக்கையைத் தயாரித்தல்
27. இந்த அறிக்கை [அது முதலில் வெளியிடப்பட்ட தேதி] ல் தயாரிக்கப்பட்டது. ல் இது கடைசியாக மதிப்பாய்வு செய்யப்பட்டது [அது கடைசியாக மதிப்பாய்வு செய்யப்பட்ட தேதி].
28. இந்த இணையதளம் கடைசியாக [தேதி] அன்று சோதிக்கப்பட்டது. சோதனையானது [சோதனையை மேற்கொண்ட அமைப்பின் பெயரைச் சேர்க்கவும் அல்லது நீங்களே சோதனை செய்ததைக் குறிக்கவும்].
29. சோதனை செய்வதற்கான பக்கங்களின் மாதிரியைத் தீர்மானிக்க இந்த அணுகுமுறையைப் பயன்படுத்தினோம் [எந்தப் பக்கங்களைச் சோதிக்க வேண்டும் என்பதை நீங்கள் எவ்வாறு முடிவு செய்தீர்கள் என்பதற்கான விளக்கத்திற்கான இணைப்பைச் சேர்க்கவும்].